# தூரநிற்பதைத் தவிர்த்து நேரில் வந்து பணியாற்ற வேண்டும்!

***வேலணை ம.ம.வி பழைய மாணவர் சங்க கனடாக் கிளையின் புதிய தலைவர் சி.இளஞ்செழியன் உரை!***

"தூர நின்று பார்ப்பதைத் தவிர்த்து. நேரில் வந்து பணியாற்ற வேண்டும். அவ்வாறான ஒத்துழைப்பின் மூலமே நமது மண்ணின் துயர் துடைக்கப்பட வேண்டும்." இவ்வாறு வேலணை மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க கனடாக் கிளையின் புதிய தலைவர் சி.இளஞ்செழியன் மேற்படி சங்கத்தின் 98ஆம் ஆண்டுக்கான வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டபின் உரையாற்றும் பொழுது குறிப்பிட்டார். கடந்த சனிக்கிழமை சென்ற் கிளயர் அவெனியூ 2723 இலக்க தேவாலய மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு பழைய தலைவர் தீவகம் வே. இராஜலிங்கம் தலைமை தாங்கினார்.

இலண்டனில் இருந்து வந்திருந்த திருமதி சண்முகநாதன் ஆசிரியை (மிஸ். பொன்னம்பலம்) சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார். சங்க நெறிமுறைகள், நடைமுறைகள், பாடசாலைக்கு ஆற்ற வேண்டிய கடமைகள், பாடசாலையின் ஆரம்ப கால அதிபர்கள், ஆசிரியர்கள் என பல விடயங்களை அவருக்கே உரித்தான அழகிய தமிழில் எடுத்துரைத்தமை விழாவிற்கு சிறப்பாக அமைந்தது. இக் கூட்டத்தில் வேலணை மத்திய மகா வித்தியாலய காவலாளியாக இருந்து சில மாதங்களுக்கு முன் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட வேலணை தெற்கைச் சேர்ந்த நாகராஜா ஆனந்தராஜா என்ற இளைஞரின் பெற்றோருக்கு உதவி செய்யும் வகையாக சிறு பணத்தொகை சேகரிக்கப் பட்டது. சுமார் 800 டொலர்கள் வரை உடனடியாக கூட்டத்திற்கு வந்தோரிடம் சேகரிக்கப்பட்டது.

மண்ணின் நிலைப்பாட்டுக்கு என்றும் துணை புரியும் வேலணை மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க கனடாக் கிளை மேலும் தற்போதைய இளைஞர்கள் தலைமையில் துரித வளர்ச்சி அடையும் என எதிர்பார்க்கலாம்.

வேலணை மத்தியமகாவித்தியாலயப் பழைய மாணவர் சங்கம் கனடாக் கிளையினது வருடாந்தப் பொதுக் கூட்டம் தலைவர் தீவகம். வே. இராஜலிங்கம் தலைமையில் 20.12.1997 அன்று நடைபெற்றது. சங்கத்தின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

**தலைவர்:-** சி. இளஞ்செழியன்
**செயலாளர்:-** ச. தயாளன்
**பொருளாளர்:-** க. பாஸ்கரன்

**நிர்வாக சபை உறுப்பினர்கள்.**

| | |
|---|---|
| 1. ஆ. பாலேந்திரன் | 2. தீவகம் வே. இராஜலிங்கம் |
| 3. ஆ. கஜேந்திரன் | 4. த. தேவநாதன் |
| 5. செ. இராஜசிங்கம் | 6. க. இளந்திரையன் |
| 7. க. சித்திரவடிவேல் | 8. சி.பூலோகபூரணன் |
| 9. க. செல்வரெட்ணம் | 10. பொ. பஞ்சலிங்கம் |

**கணக்காய்வாளர்:** ஆ. செந்தில்வடிவேல்.